www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

11 R

Register No.

நேரம் : 1.30 மணி

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு – 2024

## தமிழ்

மதிப்பெண்கள் : 50

### பகுதி – I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 6 x 1 = 6

1. 'பூ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது. 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது
அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல் இ) நாளிதழ், நன்னகர் வெண்பா
ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

2. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்
காரணம் : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்

3. 'அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' – யார் யாரிடம் கூறியது?
அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம் இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

4. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

5. சேர மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளை எடுத்தியம்பும் தொகை நூல்............
அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து இ) நற்றிணை ஈ) பரிபாடல்

6. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.

| | | |
|---|---|---|
| அ) விரியன் | – | 1) தண்டை |
| ஆ) திருகுமுருகு | – | 2) காலாழி |
| இ) நாங்கூழ்ப்புழு | – | 3) சிலம்பு |
| ஈ) குண்டலப்பூச்சி | – | 4) பாடகம் |

அ) 3 4 2 1 ஆ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 4 1 3 2

### பகுதி – II

II. எவையேனும் நான்கனுக்கு விடை தருக. 4 x 2 = 8

7. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?
8. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
9. 'சாழல்' – பொருள் தருக.
10. செந்துறைப் பாடாண்பாட்டு – துறை விளக்கம் தருக.
11. கலைச்சொல்லாக்கம் – பொருள் தருக.

III. எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

12. புணர்ச்சி விதி தருக. (ஒன்றனுக்கு மட்டும்)
அ) உலகனைத்தும் ஆ) நீரோடை
13. உறுப்பிலக்கணம் தருக. (ஒன்றனுக்கு மட்டும்)
அ) உண்டான் ஆ) துய்த்தல்
14. இலக்கணக் குறிப்புத் தருக.
அ) மாண்ட தவளை ஆ) ஒரீஇய
15. தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.
(வினாத்தொடராக்குக)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

16. என்னே ! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை (செய்தி தொடராக்குக)
17. பின்வரும் மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக.
எதிர்நீச்சல்
18. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.
அ) அறிவைத் தேடிப்போகுமிடம் ; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) – ..............
ஆ) வந்தால் மகிழ்ச்சி இது ; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) – ...........
19. கலைச்சொல் தருக :
அ) Debate ஆ) Epigraph / Inscription

## பகுதி – III

IV. எவையேனும் நான்கனுக்கு விடை தருக. 2 x 4 = 8
20. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களைக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
21. "உயர்தமிழை, உயிரென்று போற்றுமின்கள்" – இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
22. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

V. இலக்கிய நயம் பாராட்டுக. 1 x 4 = 4
23. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)
"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ"
– கம்பர்

## பகுதி – IV

VI. ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக. 1 x 6 = 6
24. சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.
25. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி – V

VII. அடிபிறழாமல் எழுதுக. 1 x 4 = 4
"சிற்றூரும்" .... எனத் தொடங்கும் 'புரட்சிக்கவி' செய்யுளை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com